1972 மார்ச் 27]

பாலர் அரங்கங்கள்.

*** 717 வினு : திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் உள்ள குழந்தைகள் படக்காட்சி தியேட்டர் போல் மாவட்டத் தலை நகரங்களிலும் அமைக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு. டாக்டர் மு. கருணுநிதி : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, எநம்தந்த இடங்களில் எந்தெந்த மாவட்டத் தலைநகரங்களில் இம்மாதிரியான பாலர் அரங்கங்கள் உருப்பெற அரசு ஆலோசித்து முடிவு செய்திருக்கிறது என்பதையும், சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தை விரிவு படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : தலைவரவர்களே, எந்தெந்த இடங்களில் இதை நிறுவுவது என்பதை முடிவு செய்திருந்தால் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கமாட்டேன். இனி மேல்தான் மாவட்டங்கள் முடிவு செய்யப்பட வேண்டும். சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கம் பழுது பார்க்கப்பட்டு நல்ல புதிய வகையிலே இன்னும் அதிகம் பேர் அமர்ந்து பார்க்கும் விதத்தில் நல்ல வசதிகளோடு செப்பனிடப்பட வேலைகள் துவங்கப் பட்டிருக்கின்றன.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, உதகையில் அறிஞர் அண்ணு அரங்கம் சகல வசதிகளுடனும் இருப்பதால் இதைக் குழந்தைகள் படக்காட்சி தியேட்டராக அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : உதகையிலுள்ள அண்ணு அரங்கத்தில் இப்பொழுது வேறுபல நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவை போக எஞ்சிய நேரம் போதுமானதாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டால் அதுபற்றி ஆய்வு செய்யலாம்.

[1972 மார்ச் 27

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, இப்போது எல்லா நகரங்களிலும் சினிமாக்கொட்டகைகள் இருக்கின்றன. ஆனால் நாடகக் கொட்டகைகள் கிடையாது. திருச்சியைத் தவிர, மற்ற இடங்களிலெல்லாம் அத்தகைய கொட்டகைகளை அமைத்தால் சிறப்புக் கூட்டங்கள் போடவும், நாடகம் போடவும் வசதியாக இருக்கும். இதற்காக அரசு ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்திலும் நாடகக் கொட்டகைகள் அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாடக அரங்குகள் அமைக்கப்பட வேண்டியதுதான். மாண்புமிகு உறுப்பினரவர்களைப் போன்ற கொஞ்சம் வசதி படைத்தவர்கள் அப்படிப்பட்ட காரியங்களைச் செய்வார்களேயானால் அரசு தன்னாலியன்ற உதவிகளையெல்லாம் செய்ய இப்போதைக்குத் தயாராக இருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, சென்னையிலிருக்கும் பல அரங்குகளிலும் அவரவர்களுடைய புகைப்படங்கள் வைக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே, கலைவாணர் அரங்கத்திலும் கலைவாணரின் புகைப்படம் வைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது கலைவாணர் அரங்கு பழுது பார்க்கப்பட்டு வருகிறது. அதனுடைய பணி அனைத்தும் முடிந்த பிறகு அதைப்பார்த்துவிட்டு அந்தக் குறையிருந்தால் உறுப்பினர் கேள்வி எழுப்பலாம்.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, மதுரை மாவட்டம் வைகை அணைப்பகுதியில் இம்மாதிரி குழந்தைகள் படக்காட்சி ஆரம்பிக்க அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வைகை அணைப் பகுதிக்கு வரும் குழந்தைகளுக்கு அங்கே ஏராளமான சிறப்புக் காட்சிகள் இருக்கின்றன, இப்பொழுது படக்காட்சி தேவையில்லை.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, திருச்சியிலேயிருக்கும் தேவர் மன்றத்தில் தினசரி ரிக்கார்ட் டான்ஸ் நடைபெற்று ஆபாச நடனங்கள் நடைபெறுகின்றன. ஆகவே, அதை மாற்றி பாலர் அரங்காக மாற்றுவதற்கு நகராட்சிக்கு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1972 மார்ச் 27]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கண்ட நடனங்கள் எவ்வகையிலே ஆபாசமாக இருந்தன என்று விவரமாக எழுதி அனுப்பினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, அரசினுடைய பரிசீலனை முடிவடைவதற்குள் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் தனிப் பட்டவர்கள் நடத்தும் சினிமாக் கொட்டகைகளில் குழந்தைகளுக்கு என்று அத்தகைய சினிமாக் காட்சிகளை உருவாக்கித்தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதற்கு அந்தப் பட அரங்கு களின் சொந்தக்காரர்கள் சம்மதம் தர வேண்டும். அதுமாத்திர மல்லாமல் குழந்தைகளுக்கு உரிய படங்களை நாம் தேர்வு செய்து குறிப்பிட்ட சிலவிடங்களில்தான் காட்ட முடியுமே அல்லாமல் தமிழ் நாட்டில் எல்லாத் திரையரங்குகளிலும் காட்டுவது என்பது இன்றைய நிலைமையில் அவ்வளவு வசதியுள்ளதாக இல்லை.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, குழந்தைகளுக்குக் காட்டும் படக் காட்சிகளிலே விஞ்ஞானத்தைப் பொறுத்தும், விவசாயத்தைப் பொறுத்தும் ஒரு பகுதி காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினரவர் கள் குழந்தைகளுக்குக் காட்டப்படும் படத்தை ஒருமுறை கூச்சமில் லாமல் பார்த்துவிட்டு, அதற்குப் பிறகு, தனக்குக் குழந்தை இல்லையே என்ற அந்தக் கூச்சமில்லாமல் பார்த்துவிட்டு, அதில் மேலும் என்னென்ன சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்று கூறுவார் களேயானால் அவைகளெல்லாம் மேற்கொள்ளப்படும்.

ராஷ்டிரபதியின் விருதுகள்

* 718 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 17—12—1971 அன்று தமிழக கவர்னர், தமிழக போலீஸ் அதிகாரிகளுக்கு ராஷ்டிரபதியின் விருதுகளை வழங்கினாரா?

(இ) யார் யாருக்கு விருதுகள் வழங்கப்பட்டன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.